1995 நவம்பர் 3]

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் தொகுதியில் மிகப்பிற்படுத்தப்பட்ட நலத்துறை சார்பாக மாணவர் விடுதி ஒன்று இருக்கிறது. இன்று பொதுவாகவே மாணவியர்களுக்கு மட்டுமே புதிய விடுதி துவங்க வேண்டும் என்று அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிற காரணத்தால் மாணவியர்களுக்கு மட்டுமே விடுதி நிறுவுகின்ற சூழ்நிலையில் மாணவர்களுக்கு என புதிய ஒரு விடுதி துவங்குகிற சாத்தியக்கூறு ஏதும் இல்லை.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் பகுதிக்கும் இந்தப் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 30 கிலோ மீட்டர் ஆகும். வருகின்ற காலத்தில் அரசின் கொள்கைப்படி குறைந்தபட்சம் மாணவியர் விடுதியையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் தொகுதியில் 4 மாதங்களுக்கு முன்னதாகத்தான் ஒரு மாணவியர் விடுதி திறக்கப்பட்டது. எதிர்காலங்களில் தேவைக்கேற்ப இதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

17—

மாறாந்தை உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்

*14983—**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம், மாறாந்தை உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[*1995* நவம்பர் *3*

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் ஒன்றியம், மாறாந்தை உயர்நிலைப் பள்ளியானது *100* சதவீத மாணவர்களை வெற்றியடைய செய்யக்கூடிய ஒரு அரசு உயர்நிலைப் பள்ளியாக இருக்கின்றது. அதிலே ஆதிதிராவிட மாணவர்கள் அதிகமாகப் பயின்று நிறைந்த வெற்றி காணக்கூடிய ஒரு நல்ல பள்ளிக்கூடம். அந்தப் பள்ளியில் போதுமான கட்டிட வசதி இல்லாததாலும், அங்கே இருக்கை வசதிகள் இல்லாததாலும் மாணவர்கள் மரத்தடியிலே உட்கார்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதேபோல, லேபரட்டரி வசதிக்கான கட்டிடங்களும் அங்கே இல்லை. ஆதலால், இதை உடனடியாகச் செய்ய வேண்டும். ஏற்கெனவே இதுபற்றி பலமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் எடுத்துச்சொல்லி இருக்கிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டிட வசதி செய்வதற்கு இப்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்வது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது. ஆதலால், இதுகுறித்து மறுபரிசீலனை செய்து கட்டிடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதற்கு பண ஒதுக்கீடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக்கூறுகள் இல்லை என்று நான் சொல்லவில்லை. தற்போது அரசிடத்திலே செயற்குறிப்பு இல்லை என்றுதான் தெரிவித்தேன். பள்ளிகளிலே கட்டிடங்கள் கட்டுவதற்கு முழுமையாக மானியம் தரும் திட்டம் தற்போது அரசிடத்திலே இல்லை. *50* விழுக்காடு தொகையை பொது மக்கள் பங்குத் தொகையாக செலுத்த முன்வந்தால் அந்தப் பள்ளிகளுக்கு இணைத் தொகையாக, *50* விழுக்காடு தொகையைத் தருவதற்கு அரசிடத்திலே திட்டம் இருக்கிறது. சென்ற ஆண்டிலும் அதற்கு முந்தைய ஆண்டிலும் இது குறித்து எல்லா மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் கடிதங்கள் எழுதப்பட்டு இருந்தபோதிலும், திருநெல்வேலி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து இது தொடர்பான எந்தவித முன்மொழிவும் பெறப்படவில்லை. ஆகவே, சென்ற இரண்டு ஆண்டுகளில் இதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

1995 நவம்பர் 3]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 50 விழுக்காடு தொகையைச் செலுத்துவதற்கு இந்த ஆண்டே முயற்சி எடுத்து அதைச் செய்தால் அரசு தன்னுடைய பங்காக 50 விழுக்காடு தொகையைத் தருவதற்கு முன்வரும். இதைத் தவிர, பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தின் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவரே பள்ளிக் கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கான வாய்ப்பை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். அதன்மூலமும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்யலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே இருந்து மாறாந்தை உயர்நிலைப் பள்ளிக்கு முதலாவதாக 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதாக—ஒரு புரபோசல் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், அதை இப்போது பரவலாக்கப்பட்ட திட்டத்தின் மூலமாகக் கட்டிக்கொள்ளலாம்; ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாகக் கட்டிக்கொள்ளலாம் என்பதைப்பார்க்கும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ அந்தத் துறையிலிருந்து தட்டிக்கழிப்பதைப்போல, பதிலில் சொல்லி இருக்கின்றார்கள். எஜுகேஷன் டிபார்ட்மெண்டிலிருந்து 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாக முதலாவதாகச் சொல்லப்பட்டு அது மாற்றப்பட்டிருக்கிறது. இதுசம்பந்தமாக அரசிடத்திலே ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா? மேலும் அந்தப் பள்ளிக்கூடத்திலே காம்ப்பௌண்ட் சுவர் இல்லை. அரசினுடைய கொள்கை என்னவென்றால், அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு காம்ப்பௌண்ட் சுவர் கட்டுக்கொடுக்கக்கூடிய திட்டம் எதுவுமே இல்லை என்பதை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டால் சொல்கிறார்கள். ஆதலால் இதையும் செய்து தரவேண்டும். நிறைய ஊர்களில் உள்ள அரசு பள்ளிகளுக்கு காம்ப்பௌண்ட் சுவர் இல்லாததால் பாதுகாப்பற்ற சூழ்நிலை இருக்கிறது. ஆதலால் அதையும் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கிற அனைத்து பள்ளிகளுக்கும் என்னென்ன வசதிகள் செய்து தரவேண்டுமென்று ஒரு ஆய்வு நடத்தி, அறிக்கை தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். அந்தவகையிலே கல்வித் துறை அதற்கான

ஆய்வை நடத்தி அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறது. அதிலே பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுகின்ற நிலைமை இல்லை. அதை அரசு செய்வதற்கு இயலாது என்பதை முன்பே தெளிவாகத் தெரிவித்து இருக்கிறோம். அதற்கு பதிலாக உயிர்வேலி அமைப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறோம். அதைப்போலவே, 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த 2 இலட்சம் ரூபாய் தருவதற்கான வாய்ப்பு, 50 விழுக்காடு தொகையை பொது மக்கள் ஏற்பாடு செய்து செலுத்தினால்தான் தர முடியும் என்று அரசு விதி இருக்கிறது. ஆகவே, நீங்கள் 50 விழுக்காடு தொகையை செலுத்த முன்வந்தால், 50 விழுக்காடு தொகையை அரசு தருவதற்கு இன்றைக்கும் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அங்கே செய்வதில் தாமதம் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசு அல்லது கல்வித் துறை எந்தவிதமான தயக்கத்தையும் காட்டவில்லை. எந்தெந்த பள்ளிகள் 50 விழுக்காடு தொகையை செலுத்த முன்வருகிறதோ, தகுதி அடிப்படையிலே நிதியை ஒதுக்குவதற்காக 150 லட்சம் ரூபாயை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் செய்ய வேண்டிய பணியை அங்கே செய்யுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

18—

மேட்லி ரோடு ரயில்வே பாலம் கட்டுதல்

*10742—**திரு. எஸ். ஜெயக்குமார்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தியாகராய நகர் தொகுதி, மேட்லி ரோடு ரயில்வே பாலம் அரசு கட்டுமான கழகத்தின் மூலம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,